ஸ்ரீ

ஸ்ரீவில்லிபுத்தூர்
ஸ்ரீ ஆண்டாள்
வைபவச் சுருக்கம்.

3 - DEC 1931

பாகவதர்

V. ஸ்ரீநிவாச அய்யங்கார்

இயற்றியது

T. A. S. ராகவா அண்டு கோ.,
ஸ்ரீவில்லிபுத்தூர்.

1931. [விலை அணா 2,

பிரிண்டிங் ஒர்க்ஸ், ஸ்ரீவில்லிபுத்தூர்-31.

Q25:38·21196 S
M31
120654

acharya.org

ஸ்ரீ

ஸ்ரீ ஆண்டாள் வைபவச் சுருக்கம்.

கண்ணன் ஸ்தோத்திரம்.

கண்ணன் கழலிணை
நண்ணு மனமுடையீர்
எண்ணுந் திருநாமம்
திண்ணம் நாரணமே.

இ—ம் பியாக் தாளம்—ஏகம்.

மேரே தர்த்தேஜி கர்கி என்ற இந்துஸ்தான் மெட்டு.

பல்லவி.

இன்றே ஓடிவா இன்பந்தரவே நீயும் (இ)

அநுபல்லவி.

இன்பந்தரவே நீயும் இன்னிசைத்தாளடி கொண்டு (இ)

சரணம்.

குன்றமெடுத் தாநிரை காத்த வெங்குட்டனை
கோவிந்தனை
அன்று அபயந்தந்து அமரர்க் கமுதளித்த
அத்தனை ஆநந்தனை

மகுடம்

கன்றுகளுடனேயும் கலைபயின்ற வெவ் கண்ணா
என்றமை ரக்ஷிக்க நீ வருவாயோ முன்னால் (இ)

தோகையரு

ஓர்மனைபிறந்து ஓர்மனை வளர்ந்து உலகெங்கும் நின்றமெய்யா
பாம்பணையின் பாவலவா பார்மகள் புகழுந் துய்யா

மகுடம்

வேறோர் துணையில்லையே வேண்டினேன் உன்னிணையே
வேதனை தீர்த்திடு நீ வேணுகோபா லயனே (இ)

acharya.org

0654.

தோகையரு

ஆயர்தங் கொழுந்தாய் அவனியைப்புரக்க ஆழ்கடல்
அமர்ந்த பாலா
ஆயபத்தாய வடிவாய் அடியார் துயரகற்ற
நின்ற சீலா

மகுடம்

மாயமாதவனே யுன் மலரிணைகட்டு திக்கும்
மங்கையருணி வாச மலர்மாலை நிறைக்க (இ)

ஸரஸ்வதி ஸ்தோத்திரம்

பியாக்—ஆதி

நான்முகனின் நாவினில்வளர் நாயகி சரணம்
தான்முகமாய் தாரணிக்குறுந் தாயகி சரணம்

சதுர்மறைபுகழ் சதுர்ப்புயந்திகழ் ஸரஸ்வதி சரணம்
விதிபுகலுயர் வித்தையேவருள் விரைவிலித் தருணம்

கலைவளரச்செய் காயத்ரீயுன் கழலிணை போற்றி
உலகில் ஞானமோனபத்தி யுற்றிட நாட்டி

பலநாலுமுனதினிய பதங்கள் பாடியே வேற்றி
பணிக்கும் மங்கல மணிக்குணிவாச கவிககருள்சேர்த்தி (நா

ஸ்ரீ ஆண்டாள் கீர்த்தனைகள்.

காப்பு.

(இருவிகற்ப நேரிசை வெண்பா)

சூடிக்கொடுத்த சுடர்க்கொடியே தொல் பாவாய்
பாடியருளவல்ல பல்வளையாய்—நாடி நீர்
வேங்கடவர்க் கென்னை விதியென்ன விம்மாற்றம்
நாங்கடவா வண்ணமே நல்கு.

---

acharya.org

ஸ்ரீ ஆண்டாள் பிறப்பும் வைபவமும்.

இ—தோடி ஏகம்

தாயிடத்தில் அன்பில்லாத என்ற மெட்டு.

பாவையைப்பாடாத ஜன்மம் பாவந்தானே
பாவந்தனை போக்கும் சேவை காணீர் (திரு)

நளவருஷத் துதித்த நாயகியாள்
நாயகியாள் நந் தாயகியாள் (திரு)

ஆடியி லவதரித்த வருந் தாயார
அருந் தாயார் அருள் தருத்தாயார் (திரு)

திருப்பூரத்திற் றிகழ்ந்த திரு மாதே
திருமாதே அன்புறுங் கோதை (திரு)

துளவத்தடி துகழ்ந்த தூ மணியாள்
தூமணியாள் புகழ் பூம் பணியாள் (திரு)

பட்டர்பிரான் படைத்த பாக்கியந் தானே
பாக்கியந்தானே அதி விலாக்கியந்தானே (திரு)

அன்பருக் கபயந்தந்து அக மகிழ்ந்தாள்
அக மகிழ்ந்தாள் இசைதனை மலர்ந்தாள் (திரு)

மாலவன் மனக்குளிரவும் மாலைப் படித்தாள்
மாலைப்படித்தாள் மலர்சூடிக் கொடுத்தாள் (திரு)

பன்னிருவர்களிலொரு பக்தளானவ்
பக்தளானள் ரங்கன் பக்திக்கானள் (திரு)

பக்தன் நிலாஸம் பேற்றி பறை சாற்றும்
பறைசாற்றும் முக்திக்கரை யேற்றும் திருப்பாவை (திரு)

acharya.org

இதுவும் அது.

இ—காபி ஏகம்

தசரத ராஜகுமார என்ற மெட்டு.

புதுவையர் கோன்மகிழ் வேதா
மலர் மாதா
புகல் நீதான்
அருள் காதா

புதுவைநகர்ச் சோதியாய் பூத்துள விளங்கித்தாய்
புவியிலுன் னடியார்கள் புனிதம்பெற வளித்தாய்
மதிலரங் கேசருக்கே மாதிருப் பாபடித்தாய்
மாலை சூடிக்கொடுத்த வாண் டாளே
பணி பூண் டாளே
புகழ் ஆர்ந் தாளே
புரந் தாளே

பத்துமூன் றிற் பருகும் பவளவா யமுதத்தாள்
பங்குனி யுத்தரத்தில் பண்புறு நறுமணத்தாள்
உத்திர மாடியினில் உற்ஸவங்கொள் மனத்தாள்
உயர்த்தனுவி னீராட வரித் தாளே
அகங் களித் தாளே
மலர் விரித் தாளே
இசைத் தாளே

மாமணக்கும் மாமலை மைக்தன்னி வாசந்துதி
மங்கைமலர்க் கோதையை மன்னிலெண்ணி லுறுதி
யாமிசைக்கு மாழ்வாரின் வாய்மொழிதானே விதி
யாரும் அவனியிலுள் ளோரே
உள் வீரே
சொல் வீரே
வெல் வீரே

acharya.org

இதுவும்அது

இந்து—தோடி ஏகம்

தங்கம் பொங்கும் மாமலராள் நறுந்
துளவமுந் தூயமும் துகளிடு மருமறைத் (தங்)
ஆஸ்ரயித்த பெரியாழ்வாரின் வமிசமாதரிக்கவந்த (தங்)
ஆடியிலேதிருப் பூரமதில் மணவாளருடன் ரத
மீதினி லோர்ந்திடும் (தங்)

பாவையிசைத்திடு மார்கழியின்னீ ராடிவரப்பிரி
யாவிடைக் குறப்பெரு மாளிடத் தருள்பெருந் (தங்)

மகுடம்

புதுவைமா நகரின் புனிதமென் றுரைத்தாள்
புகழுந் வேங்கடவன் பூஜிக்க விரைந்தாள்
மதுரை மாலழகர் மகிழ்ந்திடச் சிறந்தாள்
மதிளரங் மன்னரும் மாலையிடப் பிறந்த (தங்)

ஆடிமஹோத்சவ மைந்தாம் நாளில்
அப்பநு மேலயநு மாங்கனு மருகில்
நாடிய வமிசத்தின் நலமெனத் தேறி
நான்மறையுந் தொடர நகரிற்பவனி வரும் (தங்)

ஆழ்வாராய் மல ராண்டா ளாயும்
ஆராயிரப் படிக் காராயிரமுங்
ஆள்வார் மகிழ்மன மார்ந்தா ளாயும்
அடைவுறுந் திருமொழி யழகுறும் பாவுரைத் (தங்)

தேன்மாம் பொழிலேன் தென்றலும் வீசத்
தென்னுமா மலையின் திருவடித் தாசன்
ஞானிலமும் புகழ் நாமதி வாசம்
நலந்தருந் தமிழிசை நாமணக்கத்தா திக்கும் (தங்)

acharya.org

ஸ்ரீ ஆண்டாள் லீலா விநோதங்கள்.

இ—பியாக் ஏகம்

அமாரநபி என்ற மெட்டு

மாலைப் படித்தாள் பூ மாலைசூடிக் கொடுத்தாள்
மாலைசூடிக் கொடுத்தாள் மாலிணையை யமித்தாள் (மா)
நாலுமறையும் வென்றாள் நாலுதனமுங் கொண்டாள்
நாலுபேருக்குந் தொண்டாய் நாடியரங்கர்க்கேதான் (மா)

தொகையறு.

திருமொழியும் புகன்றாள் திடமுறவும் புகழ்ந்தே
கருவிழிகட் குளிர்ந்தாள் கலைமன்னரினை தெளிந்தே

மகுடம்

பட்டர் மனங்குளிர பண்டோல மொளிர
மட்டிற்புகழ் பரந்த மாமலர்க்கோதை நல்லாள் (மா)

தொகையறு

பன்னிருவாழ் வாரிலொரு பத்தாளாய்த் தானுறவே
மன்பதைகளும் மகிழும் மானந்த வனத்திகழவே

மகுடம்

மங்கைமலரும் வர மங்கலமா நகரின்
அங்கந் தவிழ் நிவாசத்தா மலர்தூவித் தொழும் (மா)

திருப்பாவை வைபவம்.

இ—தோடி. ஏகம்

அச்ச மோரி என்ற மெட்டு.

பக்தியுடன் திருப்பாவை பாதமே பாடுவோம்
பாடுவோம் பாடிக் கொண்டாடுவோம் (பக்)
அத்தனரங்க னரு ளானந்தமே தரும்
சித்தமே சித்தமே சித்தமே சேரும் (பக்)
பவமதையே வொழிக்கும் ப்ராப்யத்தை யளிக்கும்
பதமாகும் பதமாகும் பதமாகும் பாரும் (பக்)

acharya.org

பாவைபாடி நிறைத்தாள் மாலைசூடிக் கொடுத்தாள்
மணமேதான் மணமேதான் மணமேதா னேதும் (பக்)

அரங்கனடியிணையே அனுதினமுந் துதிக்கும்
தாங்கணி தாங்கணி தாங்கணி பாடும் (பக்)

தோகையரு

புதுவையர் கோன்பட்டன் செல்வப் புதல்வியாய்ப்
பூந்துள விஞ்தித்தநங்கோதையே
புவிதனிற் காயுற்ற பூவையாய் பூஜித்தோம்
பணித்திர் புனிதமாந் தாயே

மகுடம்

ஆராயிரப்படிக்கும் ஆரவமுதளிக்கும்
ஈராறும் மூவாறும் ஆறாறு மேகானும் (பக்)

தோகையுரு.

மண்ணையே புதந்தம் மண்ணிலே பறந்தம்
மன்னிலே குளிர்ந்த மாமலர்க்கோதை நல்லீர்
மங்களஞ்சேர் வர மங்கலநி வாசனும்
மங்களம் பாடவும் மாண்புறவுமே யுன்னீர்.

மகுடம்

செண்பகப்பூ மணத்தாய் ஜெகம்புக ழேனத்துதித்தே
பதம்பாடி யுறவாடி பணியாடுரே மென்றும் (பக்)

ஸ்ரீ ஆண்டாள் திருக்கல்யாண வைபவம்.

இ—சேஞ்சுருட்டி, சாப்பு.

செந்தில்மாநக ரந்தன்னில் என்ற மெட்டு.

சோதிப்புதுவைக் கோதை மகிழ் மணம்
ஓதுந் திருப்பாவை போகமே தரும்
மேதினியோர்க் குவி வேகமே பெரும்
வேதம் நாலு மறைந்திடும் பெரு
ளாதிபான வரங்களின் றருட்

acharya.org

கோதிலாத பூ மாலைசூடித் தெரிந்தெப்
போது மன்னார் மலர்ப் பாதமே புனைந்
தேதுகளும் மணிக் கேதமே.

பட்டரின் மனக்கட்டந் தணிர்த் திட்ட
வட்டக்கமல ஸ்ரீ வில்லியின் வண்ணப்
பட்டம் பார்ந்த பூங் கொல்லையில் உறங்
சிட்டருக்கனு கூல முற்றிடக்
கிட்டினர் வடபத்திரர் மகிழ்ந்
திட்டவேதாக மத்தி னாண்டாளையுங்
கட்டிமணந்துற உள்ளினார் எட்டி
லெட்டும் பணிந்திடத் துள்ளினார்.

மாமதுரை வுதித்த சௌந்தர
மாலழகரும் மயக்கினார் ஒரு
மாலைதமக்கென் றியம்பினார் தனிச்
சீமதிக்கலை சித்திரை யினி
லேயளித்திடு முத்தமி யருள்
வாய்மொழிக் குறம் மாமலையான் திருப்
பாதம் நடந்து மிலங்கினார் பாவைப்
பாடி நிறைந்துள மேங்கினார்.

மங்கை மன்னிசைத் தன்காலப் பன்மகிழ்
மாரன் புகழ்கலைக் காடினார் வரு
மாடியில் மங்கள மாடினார் தன்
தங்கையிற்றடி கொண் டிறங்கி
டரங்கனார் மையலி லியந்திட
பங்குனி யுத்தர மதிலே மனம்
பொங்கு மன்னார்க்கே மாலையிட்டாள் இசைத்
தங்கும் மங்கல நீ வாஸத்தாள்.

acharya.org

ஸ்ரீ ஆண்டாள் வைபவச் சுருக்கம்

ஆழ்வார், மாலவன் மனங்கவர்ந்து மண்ணில் தமக்கு திரு மகளாயுதித்து குறை தவிர்த்த மலர்க்கோதையைப் புகழ்ந்து ஸ்தோத்தரித்தல்.

இராகம் இ—தோடி ஏகம்.

வனஜாக்ஷி என்ற மெட்டு.

பல்லவி

மலர்க்கோதை மாலவன் மனங்கவர் (மர்)

அநு பல்லவி

மணக்குமா ந்துளசி மலியுகட் சோலை
புரக்குமாம் புனிதம் புகழ்தருங் காலை
இணக்கும்மாயன் திரு மொழி இசைத்தாளே
இறைக்குமன்னித யமுள் ளிருக்குமரகம் மின்ன (ம)

சரணம்

மனக்குறை தவிர்த்து மாக்ஷியுந் தந்தாள்
மங்கள மெங்கனும் மாண்புற நின்றாள்
அனைத்தரு மடுத்திசைத் தன்புறக் கொண்டாள்
அரங்கத் தரங்கணியாய் யாக்ஷியும் வென்றாள் (ம)

அவனியிலடியர்க் கபய மதளித்தாள்
அவர்தம் கலிதவிர்த் தகமகிழ்ந் தடுத்தாள்
தவமிதுவே யெனத் தனியிசை படித்தாள்
தண்டுளவத் தடியிற் றூயகமாய் நடித்தாள் (ம)

மறைக்குள் மாலவனும் மாமலையானும்
கரைக்குமா திருத்தன் காவுரையானும்
மதிக்குமா மதுரை மாலழகானும்
மனத்துள் மயங்கிநிற்க மலர்ந்தாள் மன்னுரிணையில் (ம)

மாதவர் புகழும் மங்கலம் வாழும்
மாமலை யின்னருள் மைந்தன்னி வாசன்
நீதமுந் துதிக்கும் நித்தியங் கலியன்
நீடிசையும் பணிக்கும் நிகரிற் புதுவைப்பதி (ம)

acharya.org

கஜல் ரூபகம்
(ஜோர் ஜோர் என்ற மெட்டு.)

ஆண்டாளே உன்னைநிதம் வேண்டினேனுன்தன் பாதம்
ஆதாரமா தாவும்நீ தானென்றே தான்ஸ்ரீ (ஆ)
ஆண்டருள் ரங்கனி சீர்
ஆர்ந்திடுஞ் ஸ்ரீ தேவியே ஸ்ரீ (ஆ)

தொகையறு

புதுவையர் கோன்பட்டன் செல்வப் புதல்வியே
புகழாக்கற் குற்ற பொற் செல்வியே
விதியுற்ற வில்லிபெற்ற விரசைத் தன்னியே
நீதி நிறை நித்தியர் தந்தருணியே.

மகுடம்

சேதனாசே தனர்க்காய்
செகமுற்ற செய்யவளே (ஆ)

தொகையறு

அடியார் துயரகற்ற அவனியி லுற்றாய்
ஆடியிலுற்சவ மக மகிழ்ந்தேற்றாய்
செடியாய் வல்வினைகள் தீர்த்திட நின்றாய்
செந்திருப் பாவையை செப்பியே நடித்தாய்.

மகுடம்

மங்கலநீ வாசமோதகம்
மார்கழி மஞ்சன மோரும் (ஆ)

பக்தர்கள் கூடி ஸ்ரீ ஆண்டாளின் திருவடிகளை சதமென ஸ்தோத்தரித்தல்.

இராகம் இ—காபி ஆதி தாளம்.
(கர்த்தா காருண்யனை என்றமெட்டு)

கண்ணிகள்

ஆண்டாள் மலர்ப்பதம் ஆதாரஞ் சதம் (ஆ)
வேண்டிடுவோமே நிதம் வேதவிசைக ளோதும் (ஆ)

acharya.org

தாண்டவஞ் செய்திடும் தாயக மெய்திடும்
தேர்ந்திடுஞ் சேவையாள் தென்திருப் பாவையாள் (ஆ)

பாடி நடித்தவள் பல்பல மாலையாள்
சூடியே கொடுத்தவள் சுப்ரபை யானவள் (ஆ)

ஆடி யலங்கார மான திருப்பூரம்
நாடிடுஞ் சிங்காரம் நந்திருப் பாவாரம் (ஆ)

நீராடும் வைபவம் நீள்செல்வம் சுபம்
பேரார்ந்த வேதக்கோன் பெற்றசெல்வித் துளவந் (ஆ)

திருமகளா யுற்றாள் தீன சம்ரக்ஷகி
பெரியபெருமாள் பக்கல் பேரின்பமே பெருக்கி (ஆ)

புதுவையம் பதியே புனிதங்கொட் சோதியாய்
மதுரைமா வழகரும் மயங்கிட மாலிதந்து (ஆ)

மன்னர் அடியினை மகிழ்திருக் கோதையாள்
விண்ணுரு கோபுரமும் விகசிதவூரும் தேரும் (ஆ)

மங்கள மேதிகழ் மங்கையருட் புகழ்
தங்குமாமேலி வாசன் தூவித்தொழும் விசேஷம் (ஆ)

ஸ்ரீ ஆண்டாள் திருப்பாவை ஞானானந்தம்.

இராகம்—பியாக் ஏகம்

பல்லவி

ஆனந்தமே யளிக்கும் அதிசயஞ் சேரும்
சேரும் சேரும் சேரும் (ஆ)

அநுபல்லவி

மோனந்தனைப் புறக்கும் மோக்ஷதயின்ப முற்றாக்கும்
முப்பற்றிலே பிறக்கும் முரிமையிற் றேரும்
தேரும் தேரும் தேரும் (ஆ)

சரணம்

மன்னர் மனங்களிக்க மாலை சூடிக்கொடுக்க
மங்கை மணமுடிக்க மலர்க்கிட்ட பூவும்
பாவும் நாவும் மேவும் (ஆ)

acharya.org

ஆண்டாள் திருமொழியும் அரங்கனிசை யெழிலும்
காண்பார்க் கவமொழியும் கருதிடும் போதும்
போதும் போதும் போதும் (ஆ)

மாலவன் விடைபெறவும் மார்கழி நீராடவும்
மன்றுள் மலர்க்கோதையின் மஞ்சன நீரும்
நேரும் நீருங் கோரும் (ஆ)

அரவணை யலங்காரமும் அணியுறுஞ் சிங்காரமும்
பருகிடும் பணியாரமும் பக்தரசுஷணமாம்
மணமாம் பணமாம் வணமாம் (ஆ)

அன்பர் நிறைந்திசைக்க ஆழ்வார் குறைதவிர்க்க
வண்டுளவி லுகித்த ஆண்டாளே சரணம்
சொல்லும் உள்ளும் வெல்லும் (ஆ)

தோகையரு

அங்கைமலர் பிடித்தாள் அபயந்தர வடுத்தாள்
அரங்கனுக்கே கொடுத்தாள் அழகுறும் மலரும்
துளவும் கலவும் பலவும் (ஆ)

மகுடம்

மங்கையருணி வாச மலர்மருவும் ப்ரகாச
மாளிகையின் விசேஷ மடைந்திடும் நேசம்
நேசம் நேசம் நேசம் (ஆ)

தோகையரு

நான்மறைத் தேவியவள் நம்பொரு ளாவியவள்
நவில்திருப் பாவையவள் நடந்தனை துதிப்போம்
விதிப்போம் பதிப்போம் குதிப்போம் (ஆ)

அவயவங்களின் அரிய கடமைகள்

இந்து கஜல்

(சுந்தரபியாரி என்ற மெட்டு)

தலையே வணங்கிடுவாய் தண்டுளவக் கோதையை
தத்துவங்கள் தெரிவீர் தாயகமும் பெறுவீர் (த)

acharya.org

வாடுவந்தன் முகமே வண்டுளசியைக் காண்பீர்
வளம்பெறுவீரே என்றும் வணமுறு வீரேநீறும் (௩)

காட்சிவேருண்டோ கண்காள் காண்மின்க ளாண்டாள்
[சேவை
காதலோ டஞ்சலிப்பீர் கைவல்யமு மடுப்பீர்

மூக்கே நுகருங்கொலோ முற்றும் வில்லிமாலையை
முக்தி வாமளிக்கும் மூப்பையு மேகெலிக்கும்

வாயேநீ வாழ்த்திடுவாய் வண்ணமலர்க் கோதையை
வன்மை பெருகுந்திரு நன்மை புறக்கும்பாரீர்

கர்ணங்களே கேண்மின்காள் காதலோ டெந்தாயுரை
சழருந் திருமொழியின் கனிரசம் பெருகிடுவீர்

சிந்தனைசெய்வாய் நெஞ்சே ஸ்ரீரெங்க நாயகியை
ஸ்ரீரெங்க நாதனருள் சித்திக்குமன்றோ வென்றும்

பூஜிப்பீரே கரங்காள் புதுவைமலர்க் கோதையை
புகழுடனிப்பிறவி புனிதம் பெறுவின்றே

நடப்பீரென் கால்களே நாச்சியார் மாளிகைக்கே
நயமளித்திட நிற்கும் நாதனிணை சேவிப்போம்

ஐம்பொறிகளே கூடி அஞ்சலிப்பீ ராண்டாளை
ஆதாரமா தல்லாது ஆரினிரக்ஷையந்தோ

திரிகரணங்களே நீர் திருப்பாவையைத் தொழுவீர்
சித்திக்கு மமுதமும் திண்மையு மதுவன்றோ

பட்டன் செல்வி பகன்ற பாவை யைப்பாடி உய்மின்
பக்தன் நிவாசன் துதி பயிலும் மங்கலம் சேரும் (௧)

ஸ்ரீ ரெங்கநாதன் விஷயம்.

இ—முகாரி சாப்பு

பல்லவி

திருவரங்கனே திருவருட் துரங்கனே

acharya.org

அநுபல்லவி

தீராப்பவத்திற்றியங்கு மெந்தனைக்
காராயிரக்கனே. (திரு)

சரணம்

கதிரவன் குலங்களை கடந்திட
கயவரின் குலங்களை பிடுங்கிட
பதிகளெங்குமுன் பதமிசைத்திட
கதியாய் ரகுபதியாயுற்ற (திரு)

இலையிது மலையிதும் படித்தனை
இணையொடு மணையொடு மமர்ந்தனை
மலையிது மொருதலையாய் நின்றனை
மதிளரங்கத்தில் மலர்ந்தது மென்னை (திரு)

நின்றும் இருந்தும் கிடந்தவா
நிகரில் நாலுமிலை பரந்தவா
தென்றல் மாருதம் கமழுந் தென்திசைத்
தெய்வநாயகன் நானென் றுரைந்தவா (திரு)

நாலேழு மறை வாறிலங்கூடி
காலி ரண்டிலுமே நடமாடி
மாலையார்கலி மங்கை மன்னன் பாடி
மகிழ வீடணன் புகழுங்கிடந்த (திரு)

அன்னை தந்தையைப்பிரிந்த மலைப்போ
அரங்கரை மிகவடர்ந்த களைப்போ
கன்னுங் கானத்தைக் கடந்த விளைப்போ
கல்யாணத்திற் கண்ணுறுய தென் (திரு)

மகிழ் மாறன்புகழ் மங்கலம் வளர்
மாமலை யின்னருட் கவியன் மலர்
திகழ் மாமகள் திருவடி மலர்
தெளிக்கும் நிவாசந் துதிக்கும் பண்ணிசைத் (திரு)

acharya.org

ஸ்ரீ ஆண்டாள் வைபவச் சுருக்கம்.

654

திருப்பாவையின் தத்துவமுணர்ந்து திருமாலிருஞ் சோலை சுந்தர ராஜனை ஸ்தோத்தரித்தல்.

திருப்புகழ்ச் சந்தம் இ—ம் கல்யாணி—ஆதி.

பாவைத் திருமாதின் பாதத்திலேபணிந்
தாரைந்திலுண்மை யறி—போதம்
பாழுக்குள் கேடுற்ற பாவிகளுஞ் சீர்கெட்ட
பதைநருமே சித்தி—வெகுவானல்
கோவைத்தமிழ் வேதக்கோலும்புகழ் ஞானக்
கோவையாலே வீடு—மடைவாரோ
கூருடலைக்கூடிக் கூர்கெட்ட பாவியின்
கோதற்றிடக்கிருபை—புரிவாயே
பூவிற்பிரகாசத் துளவியணி வாசா
பூவைபாசத்தியுள்—ளுறுவோனே
பூரித்தும் வாளித்தும் மேனிற்றிடும் மனப்
பூசைக்கும் நேசிக்க—நடந்தோனே
மாவரையாய் மன்றவாய் கலைகட்கிறை
யாய்ப்பொருளாய் நிறைந்—தமர்ந்தோனே
மாமலைக்குஞ் சோலை மாமலைச் சுந்தர
மாலழகாய்வளர்—பெருமானே (பா)

பக்தக்கோடிகள் கூடி புதுவைநகர் என்ற ஸ்ரீவில்லிபுத்தூர் திருவண்ணாமலை எம்பெருமானை பஜனைபாடித் துதித்தல்.

சிந்து செஞ்சுருட்டி—ஏகம்
சுந்தா நந்தா என்ற மெட்டு.

ஆராவமுதே ராகவா அகமகிழ்ந்தேனை யாளுவாய்
தீராவினை யறுக்கும் திருவேலமா யிருக்கும்
திருமேனியழ குருமுனதிரு
திருவடிகளைச் சிரமில்வைத்தேன் (ஆ)

acharya.org

ஸ்ரீ ஆண்டாள் வைபவச் சுருக்கம்.

எந்தனந்த முந்தனின்றே ஏற்றுதே எழில்பெருகவே
பந்த வினையறவே பாரோர் பதம்பெறவே
பலவளம் பெரும் மலைவள மதில்
நிலைநின்ற வனே தலை வணங்கினேன் (ஆ)

வாருங்காருஞ் சிருந்தாரும் வளம்பெரு மந்தவராமே
பாரிற் புரட்டாசியே பக்தர்க்கான ராசியே
பழவினை தீருங் கலுழன் மீதேறும்
எழில்தருந் திரு விழவினிலருள் (ஆ)

ஏதோவெந்தன் மீதுன்பதம் ஏற்கலை எழுமலையானே
நீதமரயுந்தனையே நிஷ்டை புரிந்திலையே
நிர்மலமாய் நான் கர்வ மின்றியே
சர்வதாய்ப் பஜித்தர்ச் சிக்கத் திரு (ஆ)

நாமாவளி நேமந்தாலே நாடியுந்துதி பாடினேன்
காமக்குரோதத்தாலே கஷ்டமி குத்தலாலே
கடுகியெந்தனைத் திடசித்தமுற
வடிசுவடு தந் தடியிணையிற் கூர் (ஆ)

இங்குமங்கு மெங்கும்புகழ் தங்குர் திருவேங்கடம்
சங்குசக்கரக் கோலமும் சாளக்ராம மாலையும்
சாந்திடும் அலர்மேல் மங்கையரும்
ஓர்ந்திடுந்திரு சார்வபௌமனே (ஆ)

திருமலைக்கொரு மலையாய் திருப்பதிமலை நின்றவா
திருத்தா வடம்புனைந்தாய் தீனரக்ஷக வெந்தாய்
திருப்புகழ் சிந்து சிறியனு வந்த
வருந்துதிக்குகந் தருள்புரி திரு (ஆ)

அண்ணுமலைக்கண்ணலே நின் அடியார்க் கருளாதியே
தென்னுலிமேயநின்றாய் தேவர்துதிக்குகந்தாய்
தேனமர்தாமரைக் கோனேரி மேற்றுறையான
ஸ்ரீநிவாஸமானேர் மலையானே (ஆரா)

acharya.org

இரா—ப்யாக்—ஏகம்

(அம்பிகாநித்ய கல்யாணி என்ற மெட்டு.)

மங்களம் பாடியே மகிழ்வோம் மாமலர்க்
கோதையைப் புகழ்வோம்
மாமலை வெங்கடேசனும் திருமாலழகரும்
மன்னிடும் ஜெயமங்களம்

பாவையைப் பாடியே பணிவோம்
பட்டனின்னுரையு மணிவோம்
பத்திசேர் வடமாலவன் மனப்
பாங்கினுக்கெளிக்த சுப மங்களம்

மாநிலமெங்குமே புகழும் மதிளரங்கமே திகழும்
மன்னார்மலரடிக்கே தொண்டாய் மாலையுமிட்டாள்
நித்திய மங்களம்

மங்களம் சுப மங்களமே மங்களம் ஜெய மங்களமே
மங்களவர மங்கலமாநகர் மணக்கும் நிவாசம் தாவும்.

ஸ்ரீ ஆண்டாள் திருக்கல்யாணக் கோலாட்டம்.

கோலு கோலு கோலு கோலு கோலு கோலன்ன (கோ)
கோலுவீச ஆடரமணி பாடி வருவமே

ஆண்டாள் திருமணத் தரங்கணி பாடி
ஆரணங்காள் நாமொன்றாக வன்புடன் கூடி (கோ)

கோதையின் னருள்பெறக் கோலாட்டமே பாடி
கோப்புடனே சீர்பெறக் குதூகலம் நாடி (கோ)

புதுவை நகர்ப்பூந் துளவத்தா ளைப்பாடும்
புனிதம்பெறத் தருகிடுங் கோலாட்டமே யாடும் (கோ

அற்புத மலர்க்கோதை ஸேவை யானந்தமடி
அரங்கமன்னா ரடியிணைக்கே தான் சொந்தமடி (கோ)

acharya.org

அந்தகுரு வாசாரி யனிணையடி வணங்கியே
அகமகிழ்ந்துமே கோலாட்டந் தானிசைத்திடு வோம் (கோ)

(செல்லைக் காணலியே என்ற மெட்டு)

வடபெருங்கோயி லுடையான் வாழ்த்துப்பாடிக்கார் திருக்க
வண்ணமலர்க் கோதையை வாகாய்மனத்தினி லெண்ணி

எண்ணிப்பாடும் மாலவனுந் தென்றுமே மனங்குளிர
மன்னிவிசை படித்து மாலைசூடியுங் கொடுத்தாள்

மாலைசூடித்தந்த நன்றி மார்கழி நீராடிவர
மண்ணிலெங்கும் புகழ்தர மாலவன் விடையுங்கொண்டாள்

மாலவனுங் களித்தகம் மலர்க்கோதையாள் தனக்கே
மட்டில்விடையும் பகர்ந்து மங்களவாசியுந் தந்தாள்

(கிளிக்கண்ணி மெட்டு)

மன்மத பாணத்தினால் மயங்கித் தயங்கினாராம்
மதுரை மாலழகருந்தான் சகியே
மலர்க்கோதையை எண்ணியே

எண்ணிஎட்டிமேலே வந்தார் எங்கே என்னாண்டாளென்று
ஏக்கமிக வடைந்தார் சகியே
எந்தாயாரைக் காணவே

கண்டார் சுந்தரராஜர் காதலோடு கன்னியை
கைமேற் கண்ணியமென்றார் சகியே
கட்டாயம் மாலை என்றார்

மாலை என்றதைக்கேட்ட மாமலர்க்கோதை நல்லாள்
மன்னும் மேடமாகத்திற் சகியே
மாமதிநாளிற் றந்தாள்

acharya.org

தந்தையே தநயமென்று தத்சுபமாய்க் கொண்டு
தரணியெங்கும் பவனி சகியே
தாராளமாக வந்தார்

கும்மியாகவும், காலையில் கண்ணன் என்ற மெட்டிலும்
பாடலாம்.

தண்டுளவக் கோதையைத் தானடைந்திட
தண்காலப்பனும் விரைவில் வந்தார்
மண்ணணி லெங்கும் புகழப் பெரியாழ்வாரும்
மங்களமும் பாடியே மகிழ்ந்தார் ஆழ்வார்

கரும்புவில் லோனின் கட்டுக்ககப்பட்டு
கன்னியின் மாய்கையிலே படிந்தார்
விருப்புடன் கோதை வீதிவலம் வர
வீரவசைகளுமே மொழிந்தார் அப்பன்

ஆர்வமுடன் வந்த அப்பனையுங்கண்ட
ஆடித்திருநாள் ஐந்தாவதில்
ஊர்வலமாய் வந்து உத்தமியாள் கோதை
உன்னித மங்களமும் கூறினாள் கோதை

மங்களம் கூறி மலர்ந்ததே தனக்கு
மாட்சியும் மாண்பு மென்றே தொடர்ந்தார்
எங்களும் தன்னையே ஏற்றிடத் தண்காவில்
ஏகாதசியன்று கண்மலர்ந்தார் அப்பன்

(மங்களம் பாடுவோமே என்ற மெட்டு).

முதல்வரனையாலே திரு மாமலையானும்
மாமலர்க்கோதை மையலி லகப்பட்டாரடி.

பதம்பாடி மறவாடி குங்குமம் புனைந்தார்
மானைதிருப் பாணியிலே தன் பண் பிறைக்கீரடி.

acharya.org

சிங்காரப்பதம் படித்தாள் சிலமாய் நடித்தாள்
ஸ்ரீதரிகோதை யவளும் சித்தமுங் களித்தாள்
வெங்கடேசன் மகிழ வேதமே விசைத்தாள்
வேண்டிய தோத்திரங்கள் பாடி வேதனை விடுத்தாள்

தோத்தரத்திற்குறிய தோழனுமானேன்
துளவமலர்க் கோதையேவுன் துணையனுவேனே
பாத்திரம் வேறெனக்கு பாரினிலேது
பாலித்திடாயென மொழிந்தார் பகவனுந் தானே

சேர்ந்த பெரியவரே சித்தமுங் குளிர்வீர்
சிறியனென் தன் சின் மொழிக்கு சின்மயா வுகந்தீர்
ஆராவமுதநாயக னவர் மங்களமே
ஆழ்த்திருக்கோலத்தில் அடியாளின் தனமே

சுந்தரமே போது மென்றார் இன்பமல மென்றார்
இகத்திலுச்ச வதானத்திலே விஸ்மிதங் கொண்டார்
தாம் தாம் செய்த வினையே தவிர்ப்பேனே என்றார்
தன்னொளித்தாவடம் புனைந்து தலைவன் நின்றார்

(தாரதில்லான வென்ற மெட்டு)

வந்தார் வந்தார் அரங்கமன்னார்
வண்டுளசிவரிக் கதிவிரைவாய்
வாகனமேறித் தாகமும் மீறி
வளமுறவேத் திரு மணப்பெறவே
வண்ணமலர்கோதை முன் புறவே

வாகனம் விடுத்துடன் கீழ் குதித்தார்
வண்ணக்காவென்று ஆனை மருத்தார்
வானவரும் உயர்ந்த தானவரும் துதி
வாழ்த்தினர் மின்னிரைப் போற்றினரே
வரிதை பூங்கோதையை மணத்திடவே

acharya.org

(கோகுல நகரில் என்ற மெட்டு)

மங்களம்பாடி மாமலர்மாரி பொழிந்து தேவ
துந்துபியும் முழங்கவே
மன்னரடிபணிந்து சூடிக்கொடுத்த கோதை
மாலையிட இணங்கவே
ஆழ்வாருமகமகிழ்ந் திசை பாடினர்
ஆடினர் கொண்டாடியுடன்
அரங்கமன்னரிணை அன்புடன் தொழுதார்
ஆனந்தக் கண்ணீருடன்
மாலன் படித்திருக்க மலையனும் நின்றிருக்க
மதுரை அழகிருக்க
காலப்பனுமிருக்க கலியரங்க மன்னரின்
கழலிணைக்கே களித்தாள்.

(தெம்மாங்கு மெட்டு)

பட்டரும் முன்வந்தார் பாவையின் னெழில்புகழ்ந்தார்
பட்டணமலங்கரித்து
பார்புகழ் பந்தலிட்டு
செட்டாக மேளம்போட்டு செகமெச்சவே சிருமிட்டு

பட்டுப்பீதாம்பரமும் பசும்பொன்னு ரவணியும்
மட்டிற் புகழ்பறந்த
மணிகளுமிட்டாரங்க
மன்னரும் மலர்க்கோதையும் மாண்புட னமர்ந்திருக்க

வேதியர்கள் வந்து வேதங்களு மிசைந்து
சோதிப்புதுவை நகர்ச்
சொந்தமுமக்கே யென்று
சோபனங்கள் பாடியே சுகமாதர்கள் கூடிட

acharya.org

ஸ்ரீ ஆண்டாள் வைபவச் சுருக்கம்.

(...னதயாபரனே என்ற மெட்டு)

பங்குனி உத்தரநாள் பக்தர்களு மிசைக்க
சித்திகளுந் தழைக்க
பரவையும் மணமுடித்தாள் பாவையும் மணமுடித்தாள்

மணமதுவும் முடித்தாள் மாங்கல்யமும் தரித்தாள்
தேங்கவியும் படித்தாள்
மன்னனையும் அடுத்தாள் மன்னரையுமடுத்தாள்

அடுத்தாளரங்கமன்றாள் ஐக்கியமாகி நின்றாள்
சௌக்கிய மேனிகொண்டாள்
அன்பர்கட்கபயந்தந்தாள் அன்பர்கட்கபயந்தந்தாள்

அபயந்தந் தாட்சிபெற்றாள் ஆழ்வாரின் பேரும்பெற்றாள்
ஏழ்வாரும் ஏற்றமுற்றாள்
அம்புதுவைக் கேயுற்றாள் அம்புதுவைக்கேயுற்றாள்

பாடும் மணவாளமுனி என்ற மெட்டு (மங்களம்)

மங்களங்கள் பாடுவோமே மங்கையர்கள் கூடி
செங்கோலாட்டம் ஆடி
பூம்பதங்கள் பாடி
மன்னார் மலர்க்கோதையின கழலிணை கொண்டாடி

மங்கள ஜெயமங்களம் சுபமங்களங்கள் ஏற்றும்
விண்புகழப் போற்றும்
பண்டுளவஞ் சாற்றும்
மன்னும் விஷ்ணுசித்தர் மனம் மகிழ்ந்திட விசைத்தேற்றும்.

ஸ்ரீ ஆண்டாள் திருவடிகளே சரணம்.

சுபம் சுபம் சுபம்.

acharya.org